[2022 ஏப்ரல் 13

முற்பகல் 10–50

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் விசைத்தறி மற்றும் கைத்தறித் தொழில் நிறைந்துள்ள பகுதிகளாக இருக்கின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், எங்கள் தலைவர் அவர்கள் சேலத்தில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்த ஜவுளிப் பூங்காவை இந்த ஆண்டே தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்குத் தேவையான நிலத்தைத் தேடிக்கொண்டிருக்கிறோம். நிலம் கிடைத்தவுடன் நிச்சயமாக அங்கே ஜவுளிப் பூங்கா அமைக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

110—

மேல்நிலைப் பள்ளி

***7552—திரு. ஜோசப் சாமுவேல்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பத்தூர் தொகுதியில் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அந்நெறிமுறைகளின்படி ஏற்கெனவே செயல்பட்டுவரும் உயர்நிலைப் பள்ளியைத்தான் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலும். எனவே, அம்பத்தூர் தொகுதியில் நேரடியாக

2022 ஏப்ரல் 13]

புதிய அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்க இயலாத நிலை உள்ளது என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள்.*

திரு. ஜோசப் சாமுவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அம்பத்தூர், கள்ளிக்குப்பம், மேனாம்பேடு, கல்யாணபுரம், காமராஜர்புரம் ஆகிய பகுதிகள் மிகவும் பின்தங்கிய, தொழிலாளர்கள் நிறைந்த பகுதிகளாகும். அந்தப் பகுதிகளில் அரசு உயர்நிலைப் பள்ளியில் படிக்கின்ற சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆண்டுதோறும் 10 ஆம் வகுப்பில் தேர்ச்சியடைகின்றார்கள். அதற்கேற்ப போதிய மேல்நிலைப் பள்ளிகள் இல்லை. மாணவிகளுக்கென்று ஓர் அரசு மேல்நிலைப் பள்ளி உள்ளது. ** மேலும், தொலைதூரம் சென்று பயில சிரமம் ஏற்படுவதோடு, தனியார் கல்வி நிறுவனங்களிலும் பணம் செலுத்திப் பயில வசதியில்லாத நிலை உள்ளது. இந்த நிலையைப் போக்க, இந்தப் பகுதியில் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்று அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கின்ற உயர்நிலைப் பள்ளிகளைத்தான் நாம் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துகிறோம். நேரடியாக, எடுத்தவுடன், மேல்நிலைப் பள்ளி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்கிறார்கள். 1996–லேயே* truncated *முறையை* abolish *செய்துவிட்டோம்; அப்போதுதான், 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகளைத் தனியாகத் தொடங்கும் முறை இருந்தது. இப்போது அந்த முறை இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். தரமுயர்த்துவதைப் பற்றி பலமுறை நாங்கள் சொல்லியிருக்கிறோம். அரசாணைகளையும் வெளியிட்டிருக்கிறோம். அரசாணை எண்கள் 235, 379, 49 ஆகியவற்றைப் பற்றிச் சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, ** என்று சொன்னார்கள்.*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

தாங்கள் தயவுசெய்து அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்ட அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் அதுபோன்ற சூழ்நிலை தமிழ்நாட்டில் எங்குமே இல்லாத அளவிற்கு, 2006 முதல் 2011 வரையிலான ஆட்சிக் காலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதே, அன்றைக்கு திரு. தங்கம் தென்னரசு அவர்கள் பள்ளிக் கல்வித் துறை அமைச்சராக இருந்தபோதே இந்த system almost saturate ஆகிவிட்டது. 1 கி.மீ., 3 கி.மீ. 5 கி.மீ., 8 கி.மீ. இடைவெளியில் தொடக்கப் பள்ளிகள் இருப்பது almost முடிந்துவிட்டது. இருந்தாலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பள்ளிகளைத் தரமுயர்த்துவதைப்பற்றி அதிகம் கேட்கிறார்கள். உண்மைதான். சில இடங்களில் genuine case ஆக இருக்கின்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, ஏற்கெனவே நாங்கள் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடன் இதுகுறித்து discuss செய்து கொண்டிருக்கிறோம்.

உதாரணத்திற்கு, ஓர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துகிறோமென்றால், அங்கே தனியாக 9 P.G. teachers–ஐ நியமிக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. இந்த 9 P.G. teachers–ஐ நியமிக்கும்போது ஒரு வருடத்திற்கான financial implication என்று பார்க்கும்போது, recurring cost ஆக ஒவ்வொரு வருடத்திற்கும் ரூ.50 இலட்சம் வரை சம்பளம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதுமட்டுமல்லாமல், Labs தனியாகக் கட்ட வேண்டியிருக்கிறது. Capital Expense–ஐப் பார்த்தால், 1 கோடி ரூபாய் வரை ஆகிறது. இருந்தாலும், மாணவர்களின் எதிர்கால நலன் கருதி, 1 கி.மீ., 3 கி.மீ. 5 கி.மீ., 8 கி.மீ. இடைவெளியில் பள்ளிகள் இருக்க வேண்டும் என்பதையும் கருத்தில்கொண்டு,

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2022 ஏப்ரல் 13]

அதுபோன்று இல்லாதபட்சத்தில், genuine request ஆக இருந்தால், இதுகுறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, இதை எப்படி sort out செய்ய வேண்டும் என்பதைப் பார்த்து, கண்டிப்பாகச் செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள்.

திரு. ஜோசப் சாமுவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்காமலே கொடுக்கின்ற தாயுள்ளம் கொண்ட நமது மாண்புமிகு முதல்வர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல முடிவினை எடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஒரு வினாவைக் கேட்க விரும்புகிறேன். கடந்த 2011 ஆம் ஆண்டில் அம்பத்தூர் சிறப்பு நிலை நகராட்சி, பெருநகர மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட நிலையில், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின்கீழ், தற்சமயம் 32 ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவையனைத்தையும் பெருநகர மாநகராட்சியின்கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் துறை அலுவலர்களிடம் கலந்தாலோசித்து, கருத்துரு பெறப்பட்டு, அதற்கு என்ன வழிவகை செய்ய முடியுமோ, அது கண்டிப்பாகச் செய்யப்படும். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 111, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன், மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

TRUTH ALONE TRIUMPHS